**தலைப்பு - 194 - இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்

செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்ததெனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றுநிருப பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வழிகாட்டல் இலக்கம் 2021/03 இல் 7.2 பந்தியில் அறிக்கையிடும் நிறுவனத்தினால் கணக்கீட்டு உத்தியோகத்தர் சார்பாக சேகரிக்கப்படும் வேறுபட்ட வருமானங்களினை கட்டுநிதி இணக்கக் கூற்று அறிக்கையினுள் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டுவதாகவும், அதன்படி சென்ற ஆண்டிற்கான ஒப்பீட்டு எண்ணிக்கையினையும் காட்டப்பட வேண்டுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ள கட்டுநிதி இணக்கக் கூற்று அறிக்கையில் வேறுபட்ட வருமானத் தலைப்பில் அமைச்சினால் சேகரிக்கப்பட்ட வருமானத் தலைப்பில் அமைச்சினால் சேகரிக்கப்பட்ட வருமானமாக ரூபா 53,926,281 காட்டப்பட்டிருந்த போதிலும் சென்ற ஆண்டிற்கான ஒப்பீட்டு எண்ணிக்கையின் தகவல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. | ACA 7 படிவத்தில் 2020 ஆண்டிற்கான தகவல்களை குறிப்பிடுவதற்கு தனி டம் ஒதுக்கப்பட்டிருக்கா மையினால் அப்பெறுமானம் குறிக்கப்படவில்லை என்பதனை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

**1.6.2 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சுக்குச் சொந்தமான 16 வாகனங்களின் பெறுமதியினை கணக்கிலிடப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அமைச்சுடன் இணைந்த தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய மத்திய நிலையத்திற்கு சொந்தமான 03 காணிகளுக்கான பெறுமதி | பொதுக் கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 2021/02 இல் 4.10 பந்தியின் படி இவ்வாறாக சொத்துக்களின் பதிவேற்றத்திற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த இறுதித் திகதி 2022.02.03 ஆகும். ஆகையால், 2021.12.31 உள்ளவாறாக தேவையான | சுற்றுநிருபங்களின் ஆலோசனைக்கமைய சரியானதாகவும் தாமதமில்லாமலும் கணக்குகள் தயார் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டினை தியகம மஹிந்த ராஜபக்ஷ தேசிய விளையாட்டு வித்தியாபீடம், தேசிய விளையாட்டுச் சபை, மற்றும் சிறுவியாபார அபிவிருத்திப் பிரிவு ஆகிய நிறுவனங்களின் நிதியல்லா சொத்துக்களினதும் (காணிகள் மற்றும் கட்டிடங்கள்) பெறுமதியினை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கணக்கிலிடப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | திருத்தங்களினை மேற்கொள்வதற்கு இயலாது போயிற்று. தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய மத்திய நிலையத்திற்கு சொந்தமான 03 காணிகளுக்கான பெறுமதி மதிப்பீட்டினை திணைக்களம் பெற்றுத்தரும் வரை பெயரளவிலான பெறுமதியாக CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் ரூபா 300 கணக்கிலிடப்பட்டுள்ளது. ஆயினும், இதுவரையில் பெறுமான மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து அதன் சரியான மதிப்பீட்டினை கிடைக்கப் பெறாமையினால் CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கான தகவல்களினை திருத்துவதற்கு முடியாது போய் உள்ளதனை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். தியகம மஹிந்த இராஜபக்ஷ தேசிய விளையாட்டு வித்தியாபீடம், தேசிய விளையாட்டுச் சபை, நுவரெலியா விளையாட்டு இல்லம் மற்றும் சிறு வியாபார அபிவிருத்திப் பிரிவு ஆகிய நிறுவனங்களின் நிதியல்லா சொத்துக்களின் (காணிகள் மற்றும் கட்டிடங்கள்) பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் முடிவடைந்ததன் பின்னர் அந்நிறுவனங்களின் நிதியல்லாச் சொத்துக்களை கணக்கிலிடுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. | |
| (ஆ) | தேசிய சுகததாச விளையாட்டுத் தொகுதி அதிகார சபைக்கு சொந்தமான ரூபா 50,000,000 ஆன விளையாட்டு உணவகம் இலக்கம் 61111 (ஹோட்டல் அன்ட் ரெஸ்ட்டுரன்ட்) கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் அதன்படி அந்த அளவில் அமைச்சின் நிதியல்லா சொத்துக்களினை கூடுதலாக காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சென்ற வருடங்களின் போது சரியான முறையில் சொத்துக்களினை மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாகவும் மற்றும் அமைச்சின் கீழான நிறுவனங்கள் மாற்றமடைந்ததன் காரணமாகவும் முன்னர் அமைச்சின் கீழிருந்த சுகததாச அதிகார சபைக்கு சொந்தமான விளையாட்டு உணவகத்திற்காக கொடுப்பனவினை செலுத்தும் | முறையான சொத்துக்களுக்கான முகாமைத்துவம் மற்றும் சரியாக கணக்கு வைப்பினை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | போது கணக்கிலிடப்பட்ட சொத்துக்களாகும். இதனை இராஜாங்க அமைச்சுக்கு விரைவில் கையளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | |

### 1.6.3 கூலி வேலைகள் மற்றும் முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 250/2016(i) மற்றும் 2016 ஆகஸ்ட் மாதம் 03 ஆந் திகதிய பொதுக் கணக்கு சுற்றுநிருபத்தின் 05 மற்றும் 06 பந்திகளின் படி முற்பணம் தொடர்பாக அரசுக்கான உரிமையினை குடியரசு கணக்கின் மூலம் காட்டப்படுவதனால் அதற்கான கூலி மற்றும் வேலை முற்பண ஒதுக்கல் கணக்கின் மீதியினை நிதிக்கூற்றுக்களிலுள்ள ஏசீஏ 5(ஏ) படிவம் மற்றும் 5(பீ) படிவங்கள் மூலம் காட்டப்பட வேண்டிய போதிலும் 02 திட்டங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 19,065,178 ஆன வேலையினை ஆரம்பிப்பதற்கான முற்பணத் தொகையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக அறவிடப்பட வேண்டிய ரூபா 15,753,731 முற்பணக் கணக்கில் காட்டப்பட்டிருக்காமையினை அவதானிக்கப்பட்டது. | மற்றைய இரண்டு திட்டங்களிலுள்ள மீதிகளை கூலி மற்றும் வேலை முற்பணக் கணக்கொன்றிலும் மற்றும் ஒதுக்கல் கணக்கொன்றிலும் 2022 வருடம் கணக்கிலிடுவதற்காக 2022 வருடம் கூலி வேலை முற்பண கணக்கினை ஆரம்பிக்க முடியுமா என்பதனை பொதுக் கணக்குகள் திணைக்களத்தின் மூலமாக ஆலோசனை பெறப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைப்படி கணக்குகள் வைக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 18 செலவின விடயங்களுக்கான முழுத் தொகை ரூபா 1,073,050,078 ஒதுக்கீட்டினை செலவிடப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சீருடைக்கு தகுதியான ஆண் பெண் இருபாலர்களிலும் ஊழியர் இல்லாதிருந்தமை மற்றும் Covid - 19 தொற்று பரவல் காரணமாக பெரும்பாலான கூட்டங்கள் Zoom தொழில்நுட்பம் | சுற்றுநிருபங்களுக்கு அமைய செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | ஊடாக நடாத்தப்பட்டமையினால் உபசரிப்பு செலவினங்கள் ஏற்படாதிருந்தமை, உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான மற்றும் தவணைக் குத்தகைக் கட்டணங்கள் செலுத்தும் தேவைப்பாடு ஏற்படாமை, உத்தியோகத்தர்கள் ஆதனக் கடன் பெற்றுக் கொள்ளாமையினால் அப்பணம் சேமிப்பில் இருந்தமை, பொதுநலவாய மண்டல இளைஞர் நிகழ்ச்சித் திட்ட சந்தா கட்டண கொடுப்பனவுகளுக்காக வெளிவிவகார அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்படாமை, மூலதன தன்மையினால் வாகன திருத்த வேலைகளுக்கான தேவைப்பாடுகள் ஏற்படாது இருந்தமையினால் பற்றுச்சீட்டுக்கள் முன்வைக்கப்படாமை, வெளிநாட்டு பயணங்களின் கட்டுப்பாட்டினால் இப்பண செலவினங்கள் ஏற்படாது இருந்தமை. | |
| (ஆ) | 09 மீண்டெழும் செலவினங்களுக்காக மிகை ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டிருந்த மையினால் ஒதுக்கீட்டினை உபயோகப்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 11,280,304 சேமிக்கப்பட்டிருந்தமை அச்செலவின விடயங்களுக்கான தேறிய ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 25 முதல் நூற்றுக்கு 99 வரையிலான வீச்சில் இருந்தது. | ஒவ்வொரு செலவின விடயத்தில் எதிர்பார்க்கப்பட்டது போன்று செலவுகள் ஏற்படாமை, கொவிட் தொற்று காரணமாக காரியாலய அலுவல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படாமை யினால் பல்வேறு செலவினங்களின் தேவைப்பாடு ஏற்படாமை, அலுவலக திருத்த வேலைகள் மூலதன ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டமை. | - மேற்படி - |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இன் 10.1 ஆம் பந்தியின் கீழான நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கான வழிகாட்டல் இலக்கம் 06 இன் 3.4 பந்தியின் படி குறிப்பு இலக்கம் (iii) இன் கீழான இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்று திறைசேரியினால் ஒவ்வொரு செலவுத் தலைப்புக்கள் தொடர்பாக வெளியிடப்படும் இணக்கப்பாடகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றுடன் இணங்கியிருக்க வேண்டியுள்ள போதிலும் குறிப்பு இலக்கம் iii இன் கீழான இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்று மற்றும் திறைசேரியினால் வெளியிடப்பட்ட இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றுக்கு இடையில் 06 செலவு விடயங்கள் தொடர்பாக 180,920 கூடுதலாகவும் மற்றும் 49 விடயங்கள் தொடர்பாக ரூபா 854,967 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன. | ஒதுக்கீடுகள் உள்ள செலவின விடயங்கள் தொடர்பாக மாத்திரம் CIGAS நிகழ்ச்சித் திட்டததில் பொறுப்புக்களாக பெறுமானங்களினை உட்படுத்தப்பட வேண்டும் என பொதுக் கணக்குகள் திணைக்களத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமை யினால் ஒதுக்கீடுகள் உள்ள செலவின விடயங்கள் மாத்திரம் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்த போதிலும் சம்பந்தப்பட்ட சகல பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியுள்ளமையினால் சகல பொறுப்புக்களும் நிதிக்கூற்றில் குறிப்பு இலக்கம் (iii) கீழ் உட்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளும் போது நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை களுக்கு அமைய செயற்பட வேண்டியமை. |
| (ஆ) நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் (குறிப்பு iii) , 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக செலுத்த வேண்டிய ரூபா 2,180,969 ஆன பொறுப்புக்கள், பொறுப்புக்கள் விடுவிப்பின் கீழ் காட்டப்பட்டதன் காரணமாக அந்த அளவிலான பொறுப்புக்கள் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | எதிர்வரும் வருடம் அப்பொறுப்புக்களை நிலுவையாக முன் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். இதுபோன்று கைத்தவறுகள் இதனகத்துக்கு பின்னர் ஏற்படாதவாறு செயற்படுவதற்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டியமை. |

## 2.3 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக வருட இறுதியில் பட்டியல் தயார் செய்யப்பட்டு சந்தர்ப்பத்தினைக்கு ஏற்றவாறு சம்பந்தப்பட்ட கணக்கிணைக்கு அல்லது பொதுக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டிய போதிலும் வைப்புக் கணக்கில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக இருந்த 06 வருடம் முதல் 02 வருடம் வரை மற்றும் ரூபா 33,629,309 ஆன 39 வைப்புக்கள் தொடர்பாக 2022 மார்ச் 04 வரையிலும் கூட நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | 2 வருட காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக இதனகத்திற்குப் பின்னர் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

## 2.4 வங்கி கணக்குகள் செயற்பாடு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கு இலக்கம் 7040742 கொண்ட வங்கிக் கணக்கு தொடர்பாக வழங்கப்பட்ட ஆயினும் பணமாக மாற்றுவதற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாத காலங் கடந்தவிட்ட மொத்தம் ரூபா 790,512 பெறுமதியான 76 காசோலைகள் தொடர்பாக நி.பி 396(ஈ) பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | 28 காசோலைகளுக்காக மாற்று காசோலைகள் வழங்கப்பட்டு அவற்றில் 08 காசோலைகள் தீர்க்கப்பட்டுள்ளன. மீதி காசோலைகளுக்காக சம்பந்தப்பட்ட பிரிவின் மூலம் அறிவுறுத்தப்பட்ட போதிலும் இதுவரையிலும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாமையினால் அது தொடர்பாக நி.பி 396 பிரகாரம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின்படி செயற்பட வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **விளையாட்டுக் கொள்கையொன்றினை தாபித்தல்** | | |
| அபிமானமுள்ள துலாம்பரமான ஆளுமை நிறைந்த ஜீவனுள்ள இளைஞர் பிரஜையொன்றினை மற்றும் ஜீவனுள்ள சுகதேகியான ஒழுக்கமுள்ள சமுதாயமொன்றினை கட்டியெழுப்புவதற்காக சுறுசுறுப்பான சந்ததியொன்றினை உருவாக்குவதற்காக சௌபாக்கிய தெகம எனும் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு பொருந்தும் வகையில் இலக்கம் 2187/27 கொண்ட மற்றும் 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இளைஞர் பிரஜைகளினை மையமாகக் கொள்ளப்பட்ட இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சினை தாபிக்கப்பட்டது. அதன்படி இவ் அமைச்சிற்கு உரித்தான சட்டங்கள் மற்றும் அதிகாரங்களுக்கு அமைய இளைஞர் மற்றும் விளையாட்டு விடயங்கள் தொடர்பாக கொள்கையினை வகுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மே 19 ஆந் திகதியான கணக்காய்வு தினத்தில் அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட தேசிய விளையாட்டு கொள்கையென்றினை இலங்கையில் விளையாட்டினை | இலக்கம் 1758/23 மற்றும் 2012 மே 16 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் “இலங்கையின் தேசிய விளையாட்டுக் கொள்கை” பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இந்த விளையாட்டு கொள்கையினை முன் வைக்கப்பட்டு தற்போதைக்கு 10 வருடங்கள் கடந்து போய் உள்ளதுடன் அதற்கமைய காலரீதியாக விளையாட்டு கொள்கையினை இற்றைப்படுத்தப்பட வேண்டியுள்ளதாக இளைஞர் விவகார அமைச்சு இனங்கண்டுள்ளது. இந்த விளையாட்டு கொள்கையினை தயாரிக்கும் போது தற்போது செயற்படுத்தப்படும் 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுத் துறைக்கான சட்டமூலத்தை மற்றும் அதன் திருத்த சட்ட மூலங்கையும் கவனத்திற் கொண்டு விளையாட்டுத் துறைக்கான கொள்கையினை தயாரிக்கப்பட வேண்டும் என்பது அமைச்சின் கருத்தாகும். அதன்படி தற்கால விளையாட்டுத் துறை சட்ட மூலம் மற்றும் அதன் கீழ் காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்ட விளையாட்டுத் துறைக்கான பணிப்புக்கள், விளையாட்டுப் பிரமாணங்கள் உட்பட திருத்துவதற்காக | விளையாட்டு கொள்கை யொன்றினை தாபிக்கப்படுவதன் மூலம் இலங்கையில் விளையாட்டுத் துறையினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேம்படுத்துவதன் பொருட்டு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைய தேசிய விளையாட்டு துறைக்கான கொள்கையினை தயாரிப்பதற்காக அமைச்சு மட்டத்தில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் படி விளையாட்டுத் துறைசார்ந்த வல்லுனர் மற்றும் நிபுணர்களின் கருத்துக்களினை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள துடன் தேசிய விளையாட்டு கொள்கையொன்றினை வகுத்தல், விளையாட்டு சட்டமூலம் மற்றும் விளையாட்டு பிரமாணங்களுடனான நேரொத்த முறையில் கவனம் செலுத்தப்படுவதாகவும் மேற்கொண்டு குறிப்பிட விரும்புகின்றேன். | |
| (ஆ) | 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுத் துறை சட்ட மூலத்தினை நடைமுறை ரீதியாக செயற்படுத்துவதில் உள்ள சிக்கலான சந்தப்பரங்களினை தீர்ந்து போகும் வகையில் சட்ட மூலத்தினை திருத்துவதற்கு மற்றும் இற்றைப்படுத்துவதற்கு போதிய அளவிலான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்காமை. | விளையாட்டுத் துறைக்கான சட்டமூலத்தினை திருத்துவது தொடர்பாக அடிப்படையாக தற்போது புழக்கத்தில் உள்ள விளையாட்டு பணிப்புக்கள் தனியானதொரு வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடுவதற்காக தயாரிக்கப்பட்ட வரைபினை சட்ட வரைபு திணைக்களத்திடம் 2022.03.16 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. அதேபோன்று அப்பணிப்பினைகளை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு தற்போதைய விளையாட்டு சட்ட மூலத்தினை நிகழ்காலத்தில் பொருத்தமானவாறு திருத்துவதற்காக ஓய்வுபெற்ற சட்ட வரைவாளர் திரு.சிறி மெதவெல அவர்களிடம் 2022.04.25 சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | விளையாட்டுத் துறைக்கான சட்ட மூலத்தினை நடைமுறை ரீதியாக செயற்படுத்துவதில் உள்ள சிக்கலான சந்தர்ப்பங்களினை தீர்ந்து போகும் வகையிலான சட்ட மூலத்தினை திருத்துவதற்கும் இற்றைப்படுத்து வதற்குமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தொழிற்படு திட்டத்தில் உட்பட்டுள்ள ரூபா 1,622 மில்லியன் மதிப்பீட்டு ஒதுக்கீட்டினை ஒதுக்கப்பட்டு ரூபா 37 மில்லியன் செலவிடப்பட்டிருந்த 05 திட்டங்களினை முடிக்கப்படாது நிறுத்தி விடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒதுக்கீடு இல்லாமையினால் மற்றும் கொவிட் தொற்று காரணமாய் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. | குறிப்பிட்ட கால வரம்பிற்குள் திட்டங்களினை நிறைவேற்றப்படக் கூடியதாக மற்றும் தேவைப்பாடுகளினை இனங்கண்டு திட்டங்களை முறையாகத் தயாரிக்கப்பட்டு உரிய கால வரம்புக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஈ) | **திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**<br>--------------------------------<br>ரூபா 1,049 மில்லியன் வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கங்களினை ஒதுக்கப்பட்டு அதில் ரூபா 143 மில்லியன் செலவிடப்பட்டிருந்த 11 திட்டங்களினை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. | திட்டமொன்றிற்கு செலவாகும் ஒரு கிரயத்தினை கவனத்தில் கொள்ளும் போது மற்றும் அது போன்று மத்திய நிலையங்களினை பராமரிக்கும் போது செலவாகும் கிரயத்தினை கவனித்துப் பார்த்து இத்திட்டங்களை நிறுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் இறக்குமதிக்கான கட்டுப்பாடு காரணமாக நாணய உறுதிக் கடிதம் திறப்பதில் உள்ள சிக்கல்கள், ஒப்பந்தக்காரர்கள் உரிய காலத்தில் வேலைகளை முடிக்காது விடுவதனால் அவற்றினை இடைநடுவே நிறுத்தி விடுவதற்கு தீர்மானித்தல் மீண்டும் பெறுகை செயற்பாடுகளை ஆரம்பித்தல் மற்றும் ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறாமையாலும் சில திட்டங்களை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணப் பணிகளுக்கான உரிய கால வரம்பினை சரியான முறையில் திட்டமிடப்பட வேண்டியமை மற்றும் சரியான முறையில் திட்டமிடப்பட்ட பொறுப்புக்களை செய்து முடிப்பதற்காக நிர்மாணப் பணிகளை மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைபடுத்தப்பட வேண்டியமை. |
| (உ) | **கிராமப்புற விளையாட்டு மைதானங்கள் நிர்மாணித்தல்**<br>---------------------------------------------<br>செலவின விடயம் இலக்கம் 194-2-4-14-2506 கீழ் கிராமப்புற விளையாட்டு மைதானங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்தது. அத்திட்டங்கள் கிராமிய | கிராமப்புற விளையாட்டு பாடசாலைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்தினை 2021.09.30 முன்னேற்ற | திட்ட நிர்மாண பணிகளினை முகாமைத்துவப் படுத்தல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் மேற்கொள்ளப்படல் |

| | | |
|---|---|---|
| மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் பிரதேச செயலகம் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்தது. அத்திட்டங்களினை இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் ஒதுக்கீடு ஒதுக்கிக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் தொழிற்படு திட்டத்தில் ஒவ்வொரு திட்டத்தின் விபரங்களினை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை மீளாய்வாண்டில் ரூபா 436,494,396 செலவிடப்பட்டு ரூபா 63,235,961 சேமிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு திட்டத்தின் செயல்முன்னேற்றம் பற்றிய விபரம் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் முன்னேற்ற அறிக்கையில் காட்டப்படாதிருந்ததுடன் அத்திட்டங்களின் முன்னேற்றம் பந்தியின் தேடலினை மேற்கொள்ளப் படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அறிக்கையில் உட்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு அவதானிப்பில் காட்டப்பட்டுள்ளது போல் 2021 வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் அந்நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்தினை உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | வேண்டும். |

## 3.2 சொத்து முகாமைத்துவம்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 751 படி சகல சொத்துக்களையும் பதியப்பட வேண்டுவதாக காட்டப்பட்டிருந்த போதிலும் அமைச்சுக்குச் சொந்தமான 2014 வருடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 12,129,876 ஆன 630KVA Sound Proof ஜெனரேட்டரினை சொத்துக்களுக்கான பட்டியலில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 CIGAS மூலம் பெற்றுக் கொள்ளப்படும் சொத்துக்கள் ரெஜிஸ்டரில் 175 ஆம் பக்கத்தில் மின்னனு உதிரிப்பாகம் உருப்படியின் கீழ் ரூபா 1,285,000 என மின் உற்பத்தி இயந்திரத்தினை கணக்கிலிடப்பட்டுள்ளது. | பிரமாணங்களின் பிரகாரம் சொத்துக்கள் சரியாகப் பதியப்பட வேண்டியமை. |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் மற்றும் அதற்குரிய சிறு வணிக அபிவிருத்திப் பிரிவு மற்றும் தலைமைத்துவ தேசிய மத்திய நிலையத்தின் சிரேஷ்ட மட்டத்திலான 15 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்திலான 33 வெற்றிடங்களும், இரண்டாம் மட்டத்திலான 91 வெற்றிடங்களும், ஆரம்ப மட்டத்திலான 51 வெற்றிடங்களும் உள்ளிட்ட மொத்தம் 190 வெற்றிடங்கள் நிலவின. அவ்வெற்றிடங்களுள் அமைச்சின் செயலாற்றுகை மீது மிக முக்கியத்துவம் வாய்ந்த 06 பணிப்பாளர் பதவிகள், 06 உதவி பணிப்பாளர் மற்றும் 40 முகாமைத்துவ சேவை அதிகாரிகள் உள்ளிட்ட ஊழியர் பற்றாக்குறைகள் நிலவின. | இவ் அமைச்சில் மற்றும் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சிறு வணிக அபிவிருத்தி பிரிவில் மற்றும் அம்பிலிபிட்டிய தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய மத்திய நிலையத்தில் கீழ் காணும் பம்பலில் குறிப்பிடப்பட்டள்ள வெற்றிடங்களினை நிரப்பிக் கொள்வதற்காக அன்றைய அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அறிவித்துள்ளதாகவும் அது தொடர்பாக இடையிடையே கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அது அறியத் தருகின்றேன்.<br><br>பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் ஏனைய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பிக் கொள்வதற்காக மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அறியத் தருகின்றேன். | தேவைகளினை கவனத்தில் கொண்டு குறைவாயுள்ள பணிக் குழாமினைக்கு தாமதமின்றி ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |